Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

The Eelnaaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    சித்திரை 24    (07.5.94)    சனிக்கிழமை    ஓசை 78

## மலேரியா தடுப்பு ஊழியர் திடீர் ஓய்வு நோய் தடுப்பு பணிகள் பின்னடைவு

யாழ்: மாவட்டத்தின் மலேரியா தடுப்புப் பிரிவு பணியில் உள்ளவர்கள் திடீர் என்று ஓய்வு பெறுகின்றனர். இதனால் அப் பிரிவில் பணியாற்றுவோரின் தொகை குறைந்துள்ளது இதனால் மலேரியா நோயை இல்லாதொழிப்பதற்குரிய செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இத் தடுப்பு பிரிவில் 1990 ஆம் ஆண்டில் 12 பிரிவுகள் இருந்தன தற்போது 7 பிரிவுகள் மாத்திரமே உள்ளன. ஒரு பிரிவில் ஒரு வெளிக்கள உத்தியோகத்தருடன் மேலும் மூன்று ஊழியர்கள் பணிபுரிகின்றனர் சில தினங்களுக்கு முன்னர் மலேரியா தடுப்பு பிரிவைச் சேர்ந்த மூன்று வெளிக்கள (6ஆம் பக்கம் பார்க்க)

# உத்தியோகப் பற்றற்ற பணிப்புக்களை இராணுவத் தலைமைப் பீடம் ஏற்க மறுப்பு!

## சுற்றிவளைத்த இராணுவம் பொதுமக்கள் மீது தாக்குதல்

திருகோணமலை மாவட்டம் ஈச்சிலம்பத்தை வெருகல் முகத்துவாரம், பட்டிபடி ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிவந்த சிறிலங்கா இராணுவத்தினர் நான்கு பொதுமக்களை கைது செய்துள்ளனர்.

கடந்த மூன்றாந்திகதியன்று உப்பூரல், சீனன் வெளி, இலங்கை முகத்துவாரம் ஆகிய இடங்களைச் சுற்றிவளைத்த இராணுவத்தினரே இவர்களைக் கைதுசெய்து மிக மோசமான முறையில் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

## பதுங்கியிருந்து தாக்கியதில் இரு பொது மக்கள் பலி

(மட்டக்களப்பு)

வாகரை ஆற்றில் மீன் பிடிக்கச் சென்ற பொது மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் இரு பொது மக்கள் கொல்லப்பட்டனர்

கடந்த 29-ம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் வாகரையைச் சேர்ந்தவர்களான ஐந்து பிள்ளைகளின் தந்தையாராகிய ஆறுமுகம் (வயது 45), ஏழுபிள்ளைகளின் தந்தையாராகிய அழகையா (வயது 47) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

## ஆளும் ஐ. தே. கவின் ராணுவமாக செயற்பட விருப்பவில்லையாம்

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்களைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் உத்தியோகப்பற்றற்ற பணிப்புக்களைநிறைவேற்றுவதற்கு இராணுவத் தலைமை தற்பொழுது தயார் நிலையில் இல்லை எனக் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்று நாட்டில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியில் இராணுவம் பக்கம் சாராமல் இருப்பதன் பொருட்டே இராணுவத் தலைமை இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது**

கடந்தகாலத்தைப்போன்று உத்தியோகப்பற்றற்ற நடவடிக்கைகளைமேற்கொள்வதற்கு ஆளும்கட்சி அரசியல்வாதிகள் இராணுவத்தையும்இராணுவ சதனங்களையும் பயனபடுத்த முடியாத நிலை உருவாகிவருகின்றது.

நாட்டின் பாதுகாப்புக்கும், நாட்டு மக்களின் பாதுகாப்புக்காகவுமே இராணுவம் செயற்பட வேண்டும் என்றும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தனிப்பட்ட நலன்களுக்கான நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது என்ற கரு (6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவை சீரமைக்க புதிய செயலாளர் உறுதி

(கொழும்பு)

ஐ. தே. கவை கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை சீரமைத்து அப்பழுக்கற்ற அரசியலை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் புதிய செயலாளர் டாக்டர் காமினி விஜயசேகர உறுதியளித்தார். பதவி ஏற்ற அவர் செய்தியாளர்களிடையே பேசினார்.

நாட்டில் அப்பழுக்கற்ற அரசியலை ஏற்படுத்துவதே ஜனாதிபதியின் நோக்கம் இதுவே நாட்டிற்கு தேவை சவால்களை சமாளிக்க முடியும் எனவும் அவர் கூறினார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் கட்சியில் இருந்து (6ஆம் பக்கம் பார்க்க)

பிரேமதாச நினைவு வைபவத்தில்

## கூரேயை அழைத்தமைக்கு ஹேமா கண்டனம்

[கொழும்பு]

கொச்சிக்கடையில் நடைபெற்ற பிரேமதாசாவின் முதலாவது நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சிறிசேன கூரேக்கு சவ...

...தது குறித்து ஹேமா பிரேமதாசா அவரைக் கண்டித்ததாகக் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாசாவின் பெயரால் ஏழைகளுக்கு உணவுப் பொருள்கள் ...

## பிரேமாவின் மனைவி மகன்

கள் கொல்லப்பட்டனர்

கடந்த 29-ம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் ... யோரே கொல்லப்பட்டவர்களாவர்.

## மன்னார் தீவிற்கு ராணுவ இணைப்பதிகாரி நியமனம்

(மன்னார்)

மன்னார் தீவில் இராணுவ இணைப்பதிகாரியாக பிரிகேடியர் எப்- எச்- எஸ் கொத்தேகொட நியமிக்கப்பட்டுள்ளார். பூநகரிஇராணுவத்தளம் புலிகளால் அழிக்கப்பட்டபின் பூநகரிக்கு பொறுப்பதிகாரியாக கேணல் கொத்தேகொட அனுப்பப்பட்டிருந்தார்-

தற்போது இவர் பிரிகேடியர் பதவி உயர்வு பெற்று மன்னார் இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்-

## பல்கலை. ஊழியர் வேலை நிறுத்த முஸ்தீபு

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் எதிர்வரும் 20 ஆம்திகதி முதல் தமது கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் இறங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கல்வித்துறை சாராதவர்களே இதில் ஈடுபடவுள்ளனர்-

கடந்த 28 ஆம் திகதி இவர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது-

## முகவரி தெளிவின்மையால் வடபகுதி தபால்கள் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்குரிய வெளிநாட்டுத் தபால்கள் பெருந்தொகையில் கொழும்பு தபால் பரிவர்த்தனை நிலையத்தில் குவிந்து கிடப்பதாக தெரிவிக்கப்பட்டது,

நீண்ட காலத்திற்குரிய இந்தத் தபால்கள் பல்லாயிரக் கணக்கில் தபால் பரிவர்த்தனை நிலையத்தில் முடங்கிக் கிடப்பதாகச் சொல்லப்பட்டது.

சரியான முகவரி இல்லாமலும், தெளிவான முகவரி இல்லாமலும் இந்தத் தபால்கள் விநியோகத்திற்கு எடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டது

வெளிநாடுகளில் உள்ளவர்கள் சரியாக, தெளிவாக வடபகுதியில் உள்ள உறவினர்களின் முகவரியை எழுதாமையே இதற்கான காரணம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க மேற்படி விநியோகம் செய்யப்படாமல் நீண்ட காலமாக தேங்கியிருக்கும் வடபகுதியைச் சேர்ந்தோரின் கடிதங்கள் பல பிரிக்கப்பட்டு அவற்றிலிருக்கும் காசுக் கட்டளைகள் சில விஷமிகளால் அபகரிக்கப்படுகின்றன என்றும் கூறப்பட்டது. (தி),(ச)

## மலத்தியோன் சேமிப்பதற்கு இரு பாரிய கொள்கலன்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு மலத்தியோனை அனுப்புவதற்கு வசதியாக கொழும்பில் இரண்டு பாரிய கொள்கலன்கள் பெறப்பட்டுள்ளன.

கொள்வனவு செய்யப்படும் மலத்தியோன் பெட்டிகள் இந்த இரு கொள்கலன்களிலும் வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார சேவைப் பணிப்பாளரால் இவை வாங்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெறும் மலத்தி

[6ஆம் பக்கம் பார்க்க]

---

...ச தனங்களையும் பயன்படுத்த முடியாத நிலை உருவாகி வருகிறது. இவ்வாறு ஆளும்கட்சி அரசியல்வாதிகளால் முன்மொழியப்பட்ட பல உத்தியோகப்பற்றற்ற பணிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு இராணுவ உயர் அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரிய

## பிரேமாவின் மனைவி, மகன் ஐ. தே. கவில் இணைவரா?

(கொழும்பு)

பிரேமதாசாவுக்கு எதிராச் செயற்பட்டவர்களை மீண்டும் ஐ தே கவுடன் இணைத்துக் கொள்ளும்போது அக்கட்சியில் அவர் மனைவி ஹேமா பிரேமதாசவும், மகன் சஜீத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் புலிகள் தாக்குதல் சைக்கிளில்சென்ற இருபொலிசார் பலி

[கொழும்பு]

அம்பாறையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொலிசார் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் பலியாகினர்.

இதேவேளை மட்டக்களப்பில் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாக இரு முஸ்லிம்கள் பொலிசாரால் நேற்று கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் முன்பு விடுதலைப் புலிகள் உறுப்பினராக இருந்து அதிலிருந்து விலகியவர்கள் என பொலிசார் தெரிவித்தனர்.

## நீண்டதாமதங்கள், இடைவெளிகளால் உயர்கல்வித்துறையில் நெருக்கடி

### கல்விமான்கள் கருத்து

(கொழும்பு)

உயர் கல்வியில் நீண்ட இடைவெளிகளும், தாமதங்களும் ஏற்பட்டு வருகின்றன இதனால் உயர்கல்வித்துறையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று கல்விமான்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்-

இவ்வாறான இடைவெளிகளையும், தாமதங்களையும் நீக்குவதற்கு உயர்கல்வி அமைச்சு சில ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது-

பரீட்சைகளை உரிய காலத்தில் நடாத்துதல், விடைத்தாள்களின் திருத்த வேலைகளை வேகமாக மேற்கொள்ளல், இதன் மூலம் பரீட்சைப் பெறுபேறுகளை காலக்கிரமத்தில் வெளியிடுதல், புதிய மாணவர்களுக்கான கற்கை நெறிகளை தாமதமின்றி ஆரம்பித்தல் ஆகிய நடவடிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஆசிரியர் சங்கம் - கல்வி அதிகாரிகள்

## ஆசிரியர்கள் பிரச்சினைகள் குறித்து நேற்றைய சந்திப்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவுக்கும் கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தையின் போது ஞாயிற்றுக்கிழமைகளில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள், மற்றும் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

மேலும் கல்வி அலுவலகங்களில் தமிழ்மொழி அமுலாக்கத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

அத்துடன் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவது குறித்து பகிரங்கமாக விளம்பரப்படுத்தப்படல்வேண்டும் என்றும் தகுதியான விண்ணப்பதாரர்களை நேர்முகப்பரீட்சை மூலம் அதிபர் பதவிகளுக்கு நியமிக்கவேண்டும் என்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தீமானிக்கப்பட்டது.

---

...டத்தில் கலந்து கொள்ளுமாறு சிறிசேன கூரேக்கு சலுசலா பணிப்பாளர் ரி. எம். சங்கதாஸ அழைப்பு விடுத் ... ஏழைகளுக்கு உணவுப் பொருள்கள் தானமாக வழங்கிய வைபவத்தில், ஹேமா, சங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி மாளிகை முன்

## உண்ணாவிரதமிருந்தவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனாதிபதி மாளிகை முன்னால் உண்ணாவிரதம் இருக்க முயன்ற ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார் அத்துடன் அவரைப் புகைப்படம் எடுக்க முயன்ற ''அத்த'' பத்திரிகை படப்பிடிப்பாளரும் கைதானார்-

தனக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து ஜனாதிபதி டி- பி விஜேதுங்கவிற்குத் தான் கடிதம் மூலம் முறையிட்டதாகவும் -ஆனால் ''கடிதம் கிடைத்தது'' என்ற பதில் மட்டுமே தனக்கு கிடைத்ததாகவும் அவர் கூறினர்-

தனக்கு இழைக்கப்பட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி பதவியேற்பு

## ஓராண்டு பூர்த்தியை சிறப்புற நடத்த ஏற்பாடு

சிறிலங்கா ஜனாதிபதியாக டிங்கிரிபண்டா விஜேதுங்கா பதவியேற்ற ஓராண்டு பூர்த்தியாவதைக் குறிக்கும் வைபவங்களை சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இத்தினத்தில் கண்டி தலதா மாளிகையில் விசேட வைபவம் ஒன்றை நடாத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## விசேட அதிரடிப்படையால் இரு பொதுமக்கள் கொலை

(மட்டக்களப்பு)

காஞ்சிரங்குடா குருந்தையடிச் சேனையில் சிறிலங்கா அதிரடிப்படையினர் இரு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர்-

கடந்த 30 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் கொக்கட்டிச்சோலையில் முகாமிட்டுள்ள விசேட அதிரடிப்படையினரே இவ் இருவரையும் சுட்டுக் கொன்றுள்ளனர்-

மட்டக்களப்பைச் சேர்ந்த இ- திருமால் (21), பனங்காடு அங்கரைப்பற்று, அம்பாறையைச் சேர்ந்த தயானந்தமூர்த்தி (22 ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்-

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்-

## உயர்தர மாணவர் சமூகம் தரவும்

சண்டிலிப்பாய், தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த உயர்தர பாடசாலைகளிலிருந்து இவ்வாண்டு ஆகஸ்ட்மாதம் நிகழவுள்ள க பொ. த (உத) பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல மாணவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யா/ மானிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து, உடன் கண்ணாடி வழங்கப்படும்: இல, 288, நாவலர் வீதி, (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக)ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (8199)

### கோழி பராமரிப்பவர் தேவை

எமது கோழிப்பண்ணையில் கோழி பராமரிப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். கீழ்க்காணும் முகவரிக்கு 7-5-94 காலை 10 மணிக்கு நேரில் வரவும். அந்திவானம் பதிப்பகம் நாவலர் வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம். (8182)

### முக்கோணத்துணி

முதலுதவிச் சிகிச்சையில், இரத்த வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த, எலும்பு முறிவுகளில் தக்கவைக்க கட்டுகள் போட, வெவ்வேறு முடிச்சுக்கள் கட்டுகளைச் சித்தரிக்கும் செய்முறைப்படங்கள் அச்சிடப்பெற்ற முக்கோணத்துணிகள் விற்பனைக்குண்டு மில்க்வைற், 525/2, கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம் (இ-9364)

### சுகாதார வாரம்

(யாழ்ப்பாணம்)

சகல பாடசாலைகளிலும் இம் மாதம் 16ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை 'சுகாதார வாரம்' கொண்டாடப்படவுள்ளது. இதையொட்டி பாடசாலை மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும் சுகாதாரம் பற்றிய நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் சிரமதானம் மூலம் சுத்திகரிப்பு போன்ற வேலைத் திட்டங்களும் மேற் கொள்ளப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. இறுதி நாளான 22ம் திகதி ஒவ்வொரு கோட்ட மட்டத்திலும் 'சுகாதார வார விழா' கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (22)

# 'கியூ'வில் நின்று வாங்க தாய்மார்கள் தயார்

## டி. எம். ஜயரட்னா

(கொழும்பு)

தற்போது பால்மா, அரிசி மாவு ஆகியவற்றின் விலைகளைப் பார்க்கும்போது மீண்டும் கியூவில் வந்து குறைந்த விலையில் அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு கூட தாய்மார் தயாராக இருக்கின்றனர் என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி எம் ஜயரட்னா கூறியுள்ளார்-

புசல்லாவ நகரசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், பொருள்களுக்கு அன்று தட்டுப்பாடு இருந்தது உண்மைதான் ஆனால் உள்ளூர் உற்பத்திக்கு நாம் முதலிடம் கொடுத்தோம். ஆனால் இன்று பொருள்கள் சந்தையில் கிடைக்கின்றது அவற்றை வாங்குவதற்கு மக்களிடம் பணம்தான் இல்லை-

ஜனசவிய மூலம் 14 லட்சம் பேர் பயன்பெறுவர் எனக் கூறப்பட்டது ஆனால் இன்று 25000 ரூபாவும் இல்லாமல், ஜனசவியவும் இல்லாமல்' உணவு முத்திரையும் இல்லாமல் மக்கள் திண்டாடுகின்றனர் நாம் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினால் பதவிக்கு வந்ததும் நீங்கள் கேட்கும் உரிமைகளைப் பெற்றுத் தருவோம் எனவும் தெரிவித்தார்

### கொழும்பு பல்கலைக் கழக துணைவேந்தர் பதவிக்கு மூவர் பெயர் சிபார்சு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு மூன்று பெயர்களை கொழும்பு பல்கலைக் கழகப் பேரவை பல்கலைக் கழக மானியங்கள் குழுவிற்குச் சமரிப்பித்துள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் கலாநிதி ஜி தர்மவர்த்தனா. மருத்துவ பீடப் பீடாதிபதி பேராசிரியர் நந்ததாஸ கோதட்டக்கொட, கல்விப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரூபசிங்கா ஆகியவர்களின் பெயர்களே சமர்ப்பிக்கப் பட்டவை.

### பல்தேசிய நிறுவனங்கள் சொத்தை விழுங்குகின்றன

-டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன

(கொழும்பு)

பல் தேசிய நிறுவனங்கள் எமதுசொத்துக்களை விழுங்கி வருகின்றன. பன்னாட்டுவர்த்தக நிறுவனங்கள் பலவற்றிற்கு எமது சொத்துக்கள் விற்பனை செய்யப்படுகிறது தனியார் மயமாக்கல் மூலம் தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்பட்டதோடு பல நிறுவனங்கள் தொழிலாளர்களை வெளியேற்றி அவர்களது உரிமைகளை பறித்தும் செயல்படுகின்றன- இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேதினக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்

கொம்பனித்தெரு டி மெல் பூங்காவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில் திறந்தபொருளாதாரக் கொள்கையின் காரணமாக எமது கலை கலை, கலாசார பாரம்பரியங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டு வருகின்றன

இங்கு திரண்டிருக்கும் உங்களது சக்தி மிகவும் முக்கியமானதாகும் எதிர்வரும் தேர்தல்கள் மூலம் உங்களதுவாக்குப் பலத்தைக் கொண்டு அனைத்து ஜனநாயக விரோத மற்றும் அடிப்படை உரிமை மீறல்களுக்கும் முடிவுகட்ட வேண்டும் என்றும் தெரிவித்தார்-

இக் கூட்டத்தில் வாசுதேவ நாணயக்காரா உட்படப் பலரும் பேசினார்கள்

### வெளிச்ச வசதி

யாழ்- பிறவுண் வீதியில் இயங்கிவரும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் இம் மாதம் 9ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் இரவு நேரத்தில் 'பெற்றோமக்ஸ்' வெளிச்ச வசதியுடன் மாணவர்கள் கல்வி கற்கவுள்ளனர். இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவின்

### சம்மேளனம் அமைப்பு

(கொழும்புத்துறை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சகல கிராம முன்னேற்றச் சங்கங்கள் யாவற்றையும் ஒன்றிணைத்து அண்மையில் கிராம முன்னேற்றச் சங்கங்களின் சம்மேளனம் அமைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு. கா. சந்திரராசா தலைமையில் இடம்பெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில், பிரதேச செயலாளர் அதிகாரங்கள் பரவலாக்கப் பட்டுள்ளமையினால் நிதி ஒதுக்கீடு செய்யும் போது கிராம முன்னேற்றச்சங்கங்களிடமிருந்துவேலைத் திட்டங்கள் பெறப்பட்டு நிதி ஒதுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்(24)

### பாலர் பாடசாலை கட்டடம் அமைப்பு

# வரவை பதிவதற்காகஎன்று தனி அலுவலகம் திறப்பு

### ரயில்வே கடவை ஊழியருக்கு வசதி

(நமது நிருபர்)

யாழ்மாவட்ட இரயில்வே கடவை ஊழியர்கள் தினமும் தமது தினவரவினை உறுதிப்படுத்துவதற்கு வசதியாக யாழ் செயலகத்தில் தனியான அலுவலகம் ஒன்று திறக்கப் பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றும் 352 ஊழியர்களும் இனிமேல் இவ் அலுவலகத்திலேயே தமது கையொப்பங்களை இடுவர்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இவர்களுக்கு வழங்கப்படாதிருந்த சம்பள பணத்தை கடந்த ஜனவரியிலிருந்து வழங்குவதற்கான ஒழுங்குகளை யாழ் அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் புகையிரத இலாகாவுடன் தொடர்பு கொண்ட போதுகடந்தஜனவரிமாதத்திலிருந்துசம்பளம் வழங்க உறுதியளித்துள்ளதாகத் தெரிவித்தார். (ச, தி)

# முல்லைப் பிரதேசத்தில் தடுப்பூசி போடும் திட்டம்

முல்லைப் பிரதேசத்திலுள்ள நாட்டுக் கோழிகளுக்கு தடுப்பூசி போடும் திட்டம் ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் முல்லை மிருக வைத்திய காரியாலயமும் சேர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

கடந்த மாதம் ஆரம்பிக்கப் பட்ட இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு ரீதியாக கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாக இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கடும் வரட்சி காரணமாக கோழிகளுக்கு ஏற்படும் ''இரணிக்கட்'' எனும்நோயினால் கோழிகள் இறப்பதைத் தடுத்து முட்டை உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தை முல்லை மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

### லாம்புகள் அன்பளிப்பு

அறிவழிப் போராட்டக் குழுவினர் கைதடி இடம்பெயர்ந்தோர் முகாமில் உள்ள குடும்பங்களுக்கு லாம்புகளை அன்பளிப்பாக அண்மையில் வழங்கியுள்ளனர்-

இம்முகாமில் உள்ளோர் இவர்களின் இப்பணியை வெகுவாகப் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளனர். (24)

### சுயதொழில் ஊக்குவிப்புக்கடன்

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தொழில் வாய்ப்பின்றி வாழும் மேலும் ஒரு தொகுதி பய

# பனை வளக் கண்காட்சி

கடந்த வருடம் வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியும் வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து நடாத்தவிருந்த பனைவளக் கண்காட்சி யாழ்தேவி இராணுவ நடவடிக்கை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது

மேற்படி கண்காட்சியை இம்மாத இறுதிப் பகுதியில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது

## 31-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



### அமரர் முருகர் நடேசன்

(இ' போ: ச. சாரதி)

கடந்த 07-04-94இல் அமரத்துவம் அடைந்த எது அன்புத் தெய்வம் திரு. முருகர் நடேசன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சமுகம் தந்து அன்றையதினம் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சகல வகையிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்

## வீதிகள் திருத்தம்

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபையினரின் பெருமுயற்சியால் தார் பிரச்சினையைச் சமாளித்து குண்டும் குழியுமாக உள்ள வீதிகளைப் புனரமைக்கும் முயற்சியில் யாழ் மாநகர சபை ஊழியர்கள் முன்மாதிரியாக செயற்பட்டு வருகின்றனர்,

இங்கு தார் வந்து சேரும் வரை இவ்வீதிகளில் வாகனங்களில் செல்வோர் விழுந்து எழும்புவதை தவிர்க்க இக்குழிகள் சதுரமாக கொத்தி எடுக்கப்பட்டு களிமண் போடப்பட்டு இறுக்கப்படுகிறது இவ்வாறு செப்பனிடப்படும் இவ்வீதிகள் மழையில்லாது இருந்தால் குறைந்தது ஆறும் மாதங்கள் வரை நின்று பிடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது (24)

## கலைத்திறன் போட்டி

(தென்மராட்சி)

யாழ். எழுதுமட்டுவாழ் அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலை மட்டத்திலான தமிழ்மொழி கலைத் திறன் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி அன்று அதிபர் திரு. ஐ சின்னையா தலைமையில் இடம் பெறவுள்ளது.

(86)

## கிறிஸ்தவ நூல்கள் வெளியிடப்பட்டன

(நல்லூர்)

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தினால் நேற்றைய தினம் யாழ் பொது மருத்துவ மனைமுன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்[illegible]ரியின் பேராயர் குலேந்தி[illegible] நினைவு மண்டபத்தில் இரு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

தென்னிந்திய திருச்சபையின் யாழ் பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்களால் எழுதப்பட்ட ''யாழ்ப்பாணத்துத் தமிழ் கிறிஸ்தவ கவிஞர்கள் கீர்த்தனைகள் என்ற நூலும், நாவேந்தன் அவர்களால் எழுதப்பட்ட ''மகதலேனா மரியாள்'' [illegible]று காவியம் எனும் இரு நூல்களும் ஒரே மேடையில் வெளியிட்டு வைக்கப்பட்டது;

பட்டு வருகின்றன

இன்று தொழிலாளர்களின் விடுதலை தினமாகும் ஆனால் எமக்கு இங்கு விடுதலையில்லை இந்நாட்டில் ஜனநாயகம், தொழிலாளர் உரிமைகள் என்பன மறுக்கப்படுகின்றன

அமைப்பு மகளிர் பிரிவின் தீவகக் கோட்டத்தினரின் மேற்பார்வையில் இக் கல்வி கற்றல் நடைபெறும் எனவும் வித்தியாலய அதிபர் திரு. ந. தர்மபாலன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். (22)

உடுப்பிட்டி ப.நோ. கூ. சங்கம்

[வரைவுள்ளது]

# வெற்றிடம்

சங்கத்தால் கீழ்வரும் பதவிக்கு பொருத்தமான வரை தேர்வு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. பதவி:- ராக்டர் சாரதி (தற்காலிகம்)
2. சம்பளம்:-

$$\frac{805 — 1260}{25\times 7— 35\times 8}$$ குறியீடு இல: 165/88/13

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

3. வயதெல்லை:-
   01·05-94இல் 25ற்கும் 45ற்கும் இடையில் இருத்தல் வேண்டும்.
4. தகைமைகள்:-
   1. எட்டாந்தரத்தில் சித்தி-
   2. ராக்டரும், ராக்டர் பெட்டியும் ஒட்டும் சாரதி அனுமதிப் பத்திரம்,
   3. லொறி ஓட்டும் சாரதி அனுமதிப்பத்திரம்,
5. அனுபவம்;-
   4. ராக்டர், லொறி ஓட்டுதலில் குறைந்தது 5 வருட அனுபவம்,
6. குறிப்பு:-
   1. சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,
   2. மேற்படி பதவி தற்காலிகமானதாகும்,
   3. தேர்வு செய்யப்படுவோர் சங்கத்தால் கோரப்படும் ரொக்கப் பிணை, ஆதனப் பிணை என்பவற்றைச் செலுத்த வேண்டும்,
   4. சிங்களம் பேசத் தெரிதல் விரும்பத்தக்கது,

விண்ணப்பங்களை முழுப் பெயர், சொந்தமுகவரி, பிறந்த திகதி, கல்வி, அனுபவம், சாரதி அனுமதிப் பத்திர இலக்கம் என்னும் தகவல்களை உள்ளடக்கியதாக சுயமாகத் தயாரித்து 14-05·94ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம், உடுப்பிட்டி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்

**பொது முகாமையாளர்,**

உடுப்பிட்டி ப·நோ·கூ- சங்கம்,
உடுப்பிட்டி,

(சி 9367)

## கட்டடம் அமைப்பு

(கொழும்புத்துறை)


சரசாலை வின்சன் ஆஷா பாலர் பாடசாலை புதிய இடத்தில் நடாத்துவதற்கு மேற்படி பாடசாலைக் கட்டட அமைப்புக் குழுவினர் மண்டபத்தினை ஆரம்பிக்கும் பணியில் மிகத் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர்-

இப்பகுதி மக்கள் ஒருங்கிணைந்து பாடசாலை அமைக்கும் பணியில் மிகத் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர்- (24)

[illegible] தொழில் வாய்ப்பின்றி வாழும் மேலும் ஒரு தொகுதி பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அண்மையில் சுயதொழில் ஊக்குவிப்புக்கடனை வழங்கியுள்ளது.

சுயதொழில் வாய்ப்பை ஊக்குவித்து பொருண்மியத்தை மேம்படுத்தும் நோக்குடன் வழங்கப்பட்ட இக்கடனுதவியானது தீவகக் கோட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து ஸ்ரீபன் குடியிருப்பில் (யாழ் புகையிரத நிலைய முகாம்) வாழும்பயனாளிகளுக்குவழங்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

# நன்றி நவிலல்



**அமரர்: வேலு சண்முகம்**

(உரிமையாளர் சாந்தி கபே கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.)

நுவரெலியாவை பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி, யாழ் பாணத்தில் வசித்தவருமாகிய திரு. வேலு சண்முகம் அவர்கள் 03-05-1994 அன்று சிவபதமடைந்தார் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியோருக்கும், மலர் வளையங்கள் சாத்தியோருக்கும், பல வழிகளிலும் உதவிபுரிந்தோருக்கும் எங்களின் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், தாய், தந்தை,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்.

(8216)

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சகல வகையிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குஞ்சந்தோட்டம்,
கொற்றாவத்தை.
07-05 94

- குடும்பத்தினர்

(சி-8220)

# நினைவு கூருகின்றோம்.. 07.05.1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-கரடியனாறுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரின் பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**பட்டாபி** (செல்வராசா ரூபாகரன்-மகிழடித்தீவு-மட்டு)

1987-ம் ஆண்டு யாழ் - பருத்தித்துறையில் வெடிகுண்டு ஆய்வின்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**அல்வின்** (அமிர்தலிங்கம் சற்குணராசா - வதிரி, அல்வாய் தெற்கு-கரவெட்டி)

1991-ம் ஆண்டு மட்டு-சித்தாண்டிப்பகுதியில்பேரூந்தில் பயணம் செய்து கொண்டிருந்தவர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

1992-ம் ஆண்டு மட்டு - இங்கிரிமடு வெட்டையில் எமது முகாமொன்றை சிறிலங்கா இராணுவம் சுற்றி வளைக்க முயன்ற நடவடிக்கையில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் சித்தா** (கந்தையா விசுவலிங்கம்-சந்தை வீதி, கிரான்)

**கப்டன்மயிலவன்-மாட்டின்** (குமாரவேல் கணேசராசா-வெலிகந்தை -மட்டு)

**2-ம் லெப்.விக்கினா** (சிவலிங்கம் புவனேந்திரராசா-ஏறாவூர்-மட்டு)

**2-ம் லெப்.மோகன்-கேதாரராஜன்** (சுப்பிரமணியம் விஜயகுமார் - கிரான்-மட்டு)

**இறைகுமார்-சுந்தர்** (சாமித்தம்பி சந்திரசேகரம்-மண்டூர்-மட்டு)

**மகிந்தன்-மகிந்தகுமார்** (பொன்னையா ராஜன் -மட்டு)

**சுந்தரலிங்கம்-கிரிசாந்தன்** (கிருஷ்ணபிள்ளை இதயகுமார்-மட்டு)

**சந்திரகுமார்** (விநாயகமூர்த்தி யோகராசா-மட்டு)

இச்சம்பவத்தின் பின் கதிரவெளியில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட திருமலை-மூதூர் வெருகலைச் சேர்ந்த தமிழிளைஞன், மட்டு, கதிரவெளியைச்சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9358)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# இ. தொ. காவின் துரோகிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்

## - தொண்டமான்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் இடம்பிடித்திருந்த துரோகிகள் வெளியேற்றப்பட்ட பின்னர் இப்போது இ. தொ. கா மிகவும் பலமுள்ள ஸ்தாபனமாக திகழ்கிறது. இவ்வாறு கிராமிய அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரும், இ. தொ. காவின் தலைவருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

சுமார் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கூடிய மேதினப் பேரணியின் முடிவில் நுவரெலியாவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அமைச்சர் தொண்டமான் மேலும் கூறுகையில், இ. தொ. காவின் ஐம்பது வருடகால வரலாற்றில் இ. தொ. காவின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்துவந்த துரோகிகள் இ. தொ. காவிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இது இ. தொ. காவின் அரசியலிலும், தொழிற்சங்கத்திலும் மகிழ்ச்சிக்குரிய தொரு விடயமாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் அயராது உழைக்கும் தோட்டத் தொழிலாளரின் சுபீட்ச வாழ்வுக்காக இ. தொ. கா. முழுமூச்சாக தொடர்ந்தும் பணியாற்றும் எனவும் தெரிவித்தார்.

# மக். வங்கி கடன்வழங்கலை இடைநிறுத்தம் செய்யும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் கடன் வழங்கல் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என அதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிதிப்பற்றாக்குறையேஇதற்கான காரணம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம், வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறவேண்டிய நிலை இருப்பதாகவும் அவற்றை மீளப் பெற்ற பின்னர் கடன் வழங்கல் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (தி)

# மீளகுடியேற்றியதமிழர்மீது ராணுவம் கட்டுப்பாடு விதிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பகுதியில் சிறிலங்கா அரசினால் பலாத்காரமாக மீளக்குடியேற்றப்பட்ட தமிழ் மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டபோது பொத்துவிலில் இருந்து சிறிலங்கா படையினரால் இருப்பிடங்களையும் உடைமைகளையும் இழந்து கோமாரியில் தங்கியிருந்த அகதிகளே பொத்துவிலில் மீளக் குடியேற்றப்பட்டனர்

சிறிலங்கா இராணுவத்தினரின் கவச வாகனங்களிலும் ரக்வண்டிகளிலும் பலவந்தமாக ஏற்றப்பட்டு இம்மக்கள் குடிசைகளில் தங்கவைக்கப் பட்டனர்

இவர்களுக்கு எதுவிதவசதியும் கிடைப்பதில்லை

# கெல்ற் ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன

(யாழ்ப்பாணம்)

1993 /94ஆம் கல்வி ஆண்டு பல்கலைக் கழகத்தில் கல்வி பயில தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கெல்ற் ஆங்கில வகுப்புகள் தொடர்ந்து நடைபெறவுள்ளது மேற்படிபல்கலைக்கழகங்களில் கல்வி பயில தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து ஒவ்வொரு பாடத்திற்கென தீர்மானிக்கப்பட்ட வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளி பெற்ற அனைத்து மாணவர்களும் தங்கள் தகைமைகளை நிருபிக்கக் கூடிய சான்றுகளுடன் இன்று மாலை 2.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் சென்ற வருடம் இவ்வகுப்புக்களை நடாத்துவதற்கு கல்வி இணைப்பாளர்களாக கடமையாற்றிய சகல ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்கவும் என யாழ் வலயம் - 1இன் கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

# கோ.கல்விஅலுவலகத்திற்கு தனியான வங்கிக் கணக்கு

புதிதாக செயற்பட ஆரம்பித்துள்ள சண்டிலிப்பாய், தெல்லிப்பளை சங்கானை ஆகிய கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கான வங்கிக் கணக்குகள் உரிய அலுவலகங்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இவ் வங்கிக் கணக்குகளில் கையொப்பமிடும் அதிகாரம் சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகங்களில் கடமைபுரியும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும், உரிய நிதி உதவியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் இல்லாது போனால் அதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகத்துக்குரிய காரியாலய உதவியாளர், யாழ் கல்வித் திணைக்கள கணக்காளருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக இக் கோட்டக் கல்வி அலுவலகங்கள் தெரிவித்துள்ளன.

இவ் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டதனால் இம் மாதத்துக்குரிய விசேட சம்பளக் கொடுப்பனவுகளுக் குரிய பணத்தை யாழ். கல்வித்திணைக்கள கணக்காளர் உரிய கோட்டக் கல்வி அலுவலகங்களின் கணக்கில் வங்கியில் வைப்பிலிட்டுள்ளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## கண்டெடுப்பு

ஆறுமுகம் ராகினி என்பவரது 697141138V இலக்க அடையாள அட்டை ஒன்று ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது அதற்குரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# நிறுத்தல்அளவைகருவிகள் முத்திரை பெற வேண்டும்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை பகுதியிலுள்ள வர்த்தகர்கள், வியாபாரிகள், மில் உரிமையாளர்கள் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவை உபகரணங்களுடன் வியாபாரம் மேற்கொள்ளும் போதுஇத்திணைக்கள ஊழியர்கள் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டால் இவர்கள் மீது கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமையின் பின் திடீர் பரிசோதனைகள் மூலம் இத்தகைய வர்த்தகர்கள், வியாபாரிகள் மில் உரிமையாளர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படஉள்ளதாக யாழ் மாவட்ட செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இது காலவரை தமது நிறுவை அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிட்டுக் கொள்ளாத யாழ். நகர வர்த்தகர்களும், வியாபாரிகளும் மில் உரிமையாளர்களும் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக பிரதிபுதன்கிழமைகள்தோறும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை யாழ். செயலக நிறுத்தல் அளவை அலுவலகத்தில் தவறாது முத்திரையிட்டுக்கொள்ளலாம்என வும் அவர் கூறியுள்ளார். (24)

## மாணவர்களுக்கு அன்பளிப்பு

பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் மட்டுவில் சந்திர புரஸ்கந்தவரோதய வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு சுவாமி விவேகானந்தர் நூல்களையும், அப்பியாசக் கொப்பிகளையும் வழங்கவுள்ளது,

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்திற்கு கல்வி நிவாரணம் ஏற்கனவே அன்னை சாரதா பெயரால் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (24)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கூறுவிலை கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்களை விநியோகிக்கக் கூடியவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இதற்குரிய படிவங்களை மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா 50/-ம் மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணை ரூபா 500/-ம் செலுத்தி 12 05-94-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 03 00 மணிவரை யாழ். மாநகரசபை கணக்காளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் பூர்த்தி செய்த படிவங்கள் 13-05-94-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு முன்பாக யாழ். மாநகரசபை கணக்காளர் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்பட வேண்டும் மேலதிக விபரங்களை யாழ். மாநகரசபை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## பொருட்கள்:-

01. தரமான தியோடலைற் ஒன்று (Theodolite)
02. தரமான மட்டக்கருவிஒன்று (Level Instrument)

மாநகர அலுவலகம், மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். 05-05-1994. யாழ்ப்பாணம்.

(சி-9361)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# டிராக்ரர் கொள்வனவுக்கான கூறுவிலை

பாவனைக்குகந்த தரமான நல்ல நிலையிலுள்ள இழுவைப்பெட்டியுடன் கூடிய டிராக்ரர் ஒன்றினை விநியோகிக்கக் கூடியவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இதற்குரிய படிவங்களை மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் ரூபா 50/-ம், மீளளிக்கக் கூடிய கேள்விப்பிணை ரூபா 500/-ம் செலுத்தி 17-05-94ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03 00 மணிவரை யாழ். மாநகரசபை கணக்காளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் பூர்த்திசெய்த படிவங்கள் (இணைப்பிரதியில்) 18 05 94ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக யாழ். மாநகரசபை கணக்காளர் அலுவலகத்தில், இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் சேர்க்கப்படவேண்டும். மேலதிக விபரங்களை யாழ் மாநகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 05 05 1994 (சி-9362)

உங்கள் இல்லங்கள் இன்னுமா பழமை குடிகொண்டுள்ளது?

இதோ!

கற்பனையில் கண்ட இல்லம் கண்ணெதிரே உருவாகவும நிறுவனங்களுக்கு நிறைவை கொடுக்கவும்

## டியூலக்ஸ் (Dulux) பெயின்ற் Paint

எமல்சன்
எனாமல்
ஸ்பிறே
வானிஸ்

CHEMICAL INDUSTRIES (COLOMBO) LTD.
Authorized Dealers
for Northern Province

CIC

NEW VEMAKI

உங்கள் எண்ணங்கள். எங்கள் வர்ணங்கள்.

(உங்களுக்கு தேவையான பெயின்ற் வகைகளை சகல நிறங்களில் எம்மிடம் பெற்றுக் கொள்ளமுடியும்)

வண்ண வண்ண வடிவங்களில் கண்ணைக்கவரும் நில விரிப்புக்கள் (CARPETS)

இன்னும்!

ஆண் - பெண் இருபாலாருக்குமான ஏசியா சைக்கிள்கள்

- சகலவகையான யன்னல் கண்ணாடிகள்,
  முகம் பார்க்கும் கண்ணாடிகள்
  (பல்வேறு அளவுகளில்)
- அரிசி ஆலைகளுக்கேற்ற றபர்றோல்கள் (***Rubber Rolls***)
- சமையலை இலகுவாக்கும் மண்ணெண்ணெய் குக்கர்கள்
- சாண்ட் பேப்பர் (Sand Paper)
- பிறஷ் வகைகள் (Brush Items)

மற்றும்

அன்பளிப்புகளுக்குகந்த ரீசெற், கறி டிஷ் வகைகள்

இன்னும் பல...பல......

கவலை வேண்டாம்!

எல்லாமே இன்னும் முடிந்து விடவில்லை

இவற்றைப் பெற்று சிந்தை மகிழ விரைந்திடுவீர்

## நியூ விமாகி

27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும், தேவையானோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். (சி-9365)

# தேடிப்பார்ப்பதாகக் கூறி மோ. சைக்கிளுடன் ஓடியவர்

(தென்மராட்சி)

மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்குவதற்காக வந்த நபர் ஒருவர் மாயமாக சைக்கிளுடன் மறைந்தார் இச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது.

கடந்த வியாழக்கிழமை அன்று கரவெட்டி கிழவித் தோட்டத்தைச் சேர்ந்த செ. சிவலிங்கம் என்பவர் தனது மோட்டார் சைக்கிளை விற்பதற்காக பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு மோட்டார் சைக்கிள் திருத்துனரிடம் கூறியிருந்தார். அத் திருத்துனருடன் ஊர்பேர் தெரியாத ஒரு நபர் வந்து மோட்டார் சைக்கிளை ஓடிப்பார்ப்பதாக கூறிவிட்டு திருத்துனருக்கும், சைக்கிளின் உரிமையாளருக்கும் கம்பிநீட்டிவிட்டு மோட்டார் சைக்கிளுடன் மறைந்து விட்டார். பின்னர் உரிமையாளரும் திருத்துனரும் எல்லா இடங்களிலும் தேடியும் இவர் பிடிபடவில்லை. இம் மோட்டார் சைக்கிளின் பெறுமதி ரூ 60,000 என கூறப்படுகின்றது. (86)

# பேராதனை மாணவர் விடுதிவசதி பிரச்சினை தீரும்

## அமைச்சர் அநுரா நம்பிக்கை

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் விடுதி வசதிப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்படும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்த பிரச்சினையைத் தீர்க்க மேலதிக விடுதிகள் அமைக்கப்படும் என்றும், இதற்காக ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபா செலவிடப்படும் என்றும் இதன் முதற்கட்ட வேலைகள் இன்னும் சில வாரங்களில் ஆரம்பிக்கும் என்றும் தெரிவித்தார்

## அமைச்சர் ஹமீத் பயணம்

தென் ஆபிரிக்காவின் புதிய அதிபராக நெல்சன் மண்டேலா எதிர்வரும் செவ்வாயன்று பதவியேற்கும் வைபவத்தில் சிறிலங்காவின் சார்பாக வெளியுறவு அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் கலந்து கொள்ளவுள்ளார் இதற்காக அவர் நாளை ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பிலிருந்து புறப்படவுள்ளார்.

# அராலிப் பகுதியில் சித்த ஆயுர் வேத வைத்தியசாலை

(தொல்புரம்)

அராலிப் பகுதியில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றினை அமைப்பதற்கு வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

வலிமேற்கு பிரதேச சபை சுழிபுரம் ஆயுர்வேத வைத்தியசாலையின் கிளை ஒன்றினை அராலியில் அமைப்பதற்கான அனுமதியை வடக்கு கிழக்கு மாகாணசபை ஆயுர்வேதப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ப. உரோமகேஸ்வரன் அவர்கள் வழங்கியுள்ளார்.

இம்மாத இறுதிக்குள் மேற்படி வைத்தியசாலையை இயக்கி வைப்பதற்கான துரிதநடவடிக்கையினை வலிமேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளர் திரு. க. சந்திரராசா அவர்கள் மேற்கொண்டுள்ளார். இந்த வைத்தியசாலை செவ்வாய், வியாழன், சனி நாட்களில் இயங்கவுள்ளது.

மேலும் மேற்படி பிரதேச சபையின் சங்கானை உபஅலுவலக வைத்தியசாலையின் கீழ் இயங்கி வந்த வட்டுக்கோட்டைக் கிளை நிலையம் தொடர்ந்தும் அங்கு இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கிளை வைத்திய நிலையம் திங்கள், புதன், வெள்ளி நாட்களில் வழமை போல் இயங்கவுள்ளது. (41)

# அவசரகால சட்டத்தால் தொழிலாளர்க்கு பாதிப்பு

## பாலதம்பு தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் நடந்தாலும், நடக்கா விட்டாலும் இவ்வருட இறுதிக்குள் அவசரகால சட்டத்தை நீக்கிவிடுமாறு இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் பாலா தம்பு கோரிக்கை விடுத்துள்ளார்

கொழும்பு மாளிகாகந்தை ஹைட்பார்க் மைதானத்தில் நடைபெற்ற இச் சங்கத்தின் மேதின விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் அவசரகால சட்டத்தின் காரணமாக சாதாரண ஏழைத்தொழிலாளர்கள் முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகி வருவதாகவும் தெரிவித்தார்

அத்துடன் பிரபாகரனுக்காக என்று கூறி அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்தால் சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களும் ஆடை உற்பத்தி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும் தன் பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

## இழப்பீடு கோரி விண்ணப்பம்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பன்னீராயிரம் அரச ஊழியர்கள் இழப்பீடு கோரி விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

அரச படைகளின் நடவடிக்கைகளால் உடைமைகளை இழந்தவர்கள் தமக்கு இதற்கான இழப்பீட்டை தர வேண்டுமெனக் கோரி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளனர். (24)


## தாதிகள் தேவை

தாதிகள் சேவையில் அனுபவம் மிக்கவர்கள் தேவை.

விண்ணப்ப முடிவுத்திகதி :- 14-05-94

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

விள. இல:- 329
இல, 31 ஈழநாதம்,
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9366)



மிருதங்கக் கலைஞர்

திரு. T. பாக்கியநாதன் அவர்களுக்கான

## நிதியுதவிக் கலை நிகழ்ச்சி

வயலின் இசை

வயலின்: சு. கோபிதாஸ்
மிருதங்கம்: க. கண்ணதாஸன்
கடம்: சதா. வேல்மாறன்
தபேலா: க. மயூரன்

திரிகூடராசப்பக் கவிராயரின்

## குற்றாலக் குறவஞ்சி

(நடன நாடகம்)

நடன அமைப்பு: சாந்தினி சிவனேசன்
இசையமைப்பு: வர்ண ராமேஸ்வரன்
தயாரிப்பு: சிவஞானம் ஜெயசங்கர்

இடம்:

இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம்

காலம்:

09.05.1994 திங்கள் மாலை 5.00 மணி
(17.04.1994 அன்று நடைபெற இருந்த நிகழ்ச்சி)

அன்பளிப்பு:
ரூ. 250/-, 100/-, 50/-

(சி-9363)


# அறிவித்தல்

1992இல் நடைபெற்ற பொதுப்போட்டிப் பரீட்சை மூலம் திறமையடிப்படையில் அரச சேவையில் இணைந்த சேவைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது தகைமையை நிரூபிக்குமாறு கேட்கப்பட்டனர். அவர்களில் பின்வருவோர் இதுவரை தமது தகைமையை நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி நிரூபிக்கவில்லை. இவர்கள் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமோ அல்லது கொழும்பிலுள்ள பொது நிருவாக அமைச்சின் இணைந்த சேவை பணிப்பாளரிடமோ தோற்றி தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் தங்கள் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்கள் இதில் விருப்பம் அற்றவர்களாக கருதப்பட்டு பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்கள். இதன் பின்பு இது சம்பந்தமாக எந்தவிதமான கடிதத் தொடர்புகளும் வைத்துக்கொள்ளப்பட மாட்டாதென்பதையும் மேலும் தெரிவிக்க விரும்புகிறேன்.

திகதி- 28-04-1994 [illegible]

## கோப்பாய் தெற்கு (இருபாலை) கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை

கோப்பாய் தெற்கு இருபாலை கற்பக விநாயகர் ஆலய பொதுக்கூட்டம் 30-4-94 சனிக்கிழமை பி.ப. 5.00 மணியளவில் ஆலயமண்டபத்தில் கோப்பாய் வட்டவை பொறுப்பாளர் திருநேசன் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் பொதுமக்களின் ஏகோபித்த கோரமாக திருப்பணிச்சபையை பரிபாலன சபை என மாற்றம் செய்யப்பட்டு இப்பரிபாலன சபையினருக்கே ஆலய நிர்வாகம் அனைத்தையும் நடாத்தும் அதிகாரம் உண்டென கோப்பாய் வட்டவைப் பொறுப்பாளர் முன்னிலையில் பொதுமக்களின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்டு, கீழ்வருவோர் தெரிவு [illegible]

## பராமரிப்புச் சேவை

நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் மற்றுமொரு சேவை நோயாளர், மற்றும் தனிமையில் வாடும் முதியோர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தை பிரசவித்த தாய்மார்கள், மழலைகள் ஆகியோரைப் பராமரிக்கும் சேவைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நோயாளர் நலன்புரிச் சங்கம் முன்வந்துள்ளது.

இச்சேவையைப் பெற்றுக் கொள்ள விழைவோர் மேலதிக விபரங்களுக்கும், சேவையைப் பெற்றுக் கொள்வதற்கும் நோயாளர் நலன்புரிச் சங்க செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

"தொண்டுள்ளங் கொண்டோம் யாம்"

திகதி- 28-04-1994

இணைந்த சேவைகள் ஆணையாளர்.

## பெயர்ப்பட்டியல்

எழுதுவினைஞர்

| | பெயர் | முகவரி | சுட்டிலக்கம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. | திரு. ஆர். கேசவன் | மிதில்கரை, துன்னாலை தெற்கு, கரவெட்டி | 5007174 | 147 |
| 2. | செல்வி கே. பீ, கௌரி அம்பாள் | வாரிவளவு, காரைநகர் | 4837568 | 142 |
| 3. | செல்வி ஜீ. மங்களவதனி | கணேச நிலையம், சூறாவத்தை, சுண்ணாகம் | 4840094 | 127 |
| 4. | பீ. கோமதி | பன்னாலை, தெல்லிப்பளை | 4900040 | 123 |
| 5. | திரு. கே. ஏ. நிசாந்தன் | மே/பா. ஜே. ஏ. எக்ஸ்ஸ விஜயன், யூனியன் வியூ ஒழுங்கை, கரவெட்டி | 5015963 | 120 |
| 6 | செல்வி எஸ். பத்மினி | நாவலடிகேணி, காரைநகர் | 4827307 | 119 |
| 7. | திரு. எஸ். இந்திரகுமார் | மாதகல் கிழக்கு, மாதகல் | 4838905 | 119 |
| 8. | திரு. கே சிவதாஸ் | பத்திரகாளி கோவில் ஒழுங்கை, பருத்தித்துறை | 4817156 | 118 |
| 9. | செல்வி எஸ். ரமணிகா | இல 1; முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | 4837511 | 118 |
| 10. | செல்வி என். விமலாம்பிகை | இல. 3, சின்னக்கடை வீதி, யாழ்ப்பாணம் | 4810578 | 117 |
| 11. | திரு. எம் இசட். எம். அசிம் | இல. 31, நாவலர் வீதி, சோனகத்தெரு, யாழ். | 2121037 | 114 |
| 12. | செல்வி கே. நடராஜா | குருநாதர் கோவிலடி, தெல்லிப்பளை | 4905136 | 113 |
| 13. | செல்வி பீ. மஞ்சுளா | 20/1, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ். | 4818500 | 112 |
| 14. | செல்வி என், மதுமதி | அன்பளம், இளவாலை | 4825060 | 112 |
| 15. | செல்வி ஆர் வானதி | பெரியதோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி | 4844356 | 112 |
| 16. | செல்வி என். தயாளினி | இல. 218/1, பலாலிவீதி, கந்தர்மடம், யாழ். | 4816524 | 111 |
| 17. | திரு. எஸ், சற்குணராஜா | பொன்னம்பலம் வீதி, காரைநகர் | 4818856 | 111 |

தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்)

| | பெயர் | முகவரி | சுட்டிலக்கம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 18. | செல்வி எஸ் பாலகிருஷ்ணன் | தும்பளை வீதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை | 4820533 | 48 |
| 19. | செல்வி எல். அமலஜெயராணி | மயிலிட்டி, காங்கேசன்துறை | 5011370 | 44 |
| 20. | செல்வி ஜே. ராஜேஸ்வரன் | இடந்தாவத்தை, அல்வாய் தெற்கு, அல்வாய் | 5011228 | 42 |

தமிழ்த் தட்டெழுத்தாளர்

| | பெயர் | முகவரி | சுட்டிலக்கம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 21. | செல்வி எஸ். ரோகினி | 95, ஏ. கோவில் வீதி, நல்லூர், யாழ். | 4811655 | 86 |
| 22. | செல்வி கே, ஜே. ரேணுகாதேவி | 78/9, கஸ்தூரியார் வீதி, யாழ். | 4910119 | 80 |

(சி-9357)

கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்டு, கீழ்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் நா. சுந்தரலிங்கம் உப தலைவர்: செ. காண்டீபன் செயலாளர் க. வருணநதன் பொருளாளர் க. இரவீந்திரகுமாரன்.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்

1) சி. தவரத்தினம்
2) ஆ. கந்தசாமி
3) வ. செல்லத்துரை
4) வ. இராசையா
5) இ. ஜெயராசா
6) மூ. பேரம்பலம்
7) த. கணேஸ்
8) த. வரதராசா
9) ச. பாலகுமார்
10) ச. பாலசிங்கம்
11) சு. இராசலிங்கம்
12) ப. மகாராசா
13) செ. குணசிங்கம்
14) த. இராசரத்தினம்
15) சு. விவேகானந்தன்

(8210) செயலாளர்

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

ஆவரங்கால் மத்திய வி. க. வளர்ச்சி நிதிக்காக ஆவரங்கால் மத்திய வி. க. நடாத்தும் மாட்டு வண்டி சவாரி இன்று பி. ப 2 மணிக்கு ஆவரங்கால் சவாரி மைதானத்தில் இடம்பெறும்

பிரவேசம் ரூபா 10/-

**போட்டியாளர்களின் கவனத்திற்கு**

இன்றைய போட்டியில் ஊசித்தடி பாவிப்பதற்கு சவாரிச் சங்கம் அனுமதித்துள்ளதனையும் அறியத் தருகின்றோம்.

**- ஆவரங்கால் மத்திய வி. க.**

(8214)

## பணிநிலை வெற்றிடங்கள்

நிதி நிறுவனம் ஒன்றில் நகை அடைவு பிடிக்கும் பணிநிலையில் அமர்த்துவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பணி நிலை தொடர்பான முன் அனுபவம் உடையவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு நாள்: 15 - 05 - 1994**

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி-

**விளம்பர இல- 327**

ஈழநாதம்
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: விண்ணப்ப மேல் உறையின் இடது பக்க மேல் மூலையில் விளம்பர இலக்கத்தைக் குறிப்பிடவும்.

(சி-9359)

நிர்வாகம்
நோயாளர் நலன்புரிச் சங்கம்
(8212) யாழ் போதனா மருத்துவமனை

## பணிநிலை பயிற்சியாளர்கள்

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளில் தொடங்கப்படவுள்ள வாணிப நிறுவனங்களில், பின்வரும் பணிநிலைகளில் அமர்த்துவதற்காகப் பயிற்றப்படுவதற்குப் பொருத்தமான ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) முகாமையாளர்கள்
2) கணக்குப் பதிவாளர்கள்
3) கணக்காளர்கள்
4) களஞ்சியப் பொறுப்பாளர்கள்
5) காசாளர்கள்
6) எழுதுநர்கள்
7) சிட்டை எழுதுநர்கள்
8) விற்பனையாளர்கள்
9) சிற்றூழியர்கள்

**கல்வித் தகைமை:**

(அ) க. பொ. த (உயர்தரம்) வர்த்தகப்பிரிவில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் அல்லது க. பொ. த (சாதாரண தரம்) தேர்வில் தமிழ், கணிதம் உட்பட குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அகவை:**

01-05-94இல் 18 ஆண்டிற்குக் குறையாதவராகவும் 30 ஆண்டிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
மேற்படி பணிநிலைகளில் சேவைசெய்த முன் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு நாள்: 21-05-1994**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

**விளம்பர இல 328**
**ஈழநாதம்**
**மகேந்திரா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு: விண்ணப்ப மேல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விளம்பர இலக்கத்தைக் குறிப்பிடுக

(சி-9360)

**சிந்தனைக்கு**

*ஆசை, வெறுப்பு, மன மயக்கம் இவையே தீயதின் வேர்கள்*

*— கௌதம புத்தர்*


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-05-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் - 05


# மக்கள் முட்டாள்கள் அல்ல

ஆறுமாத காலமாக யுத்தம் பற்றிய கர்ஜனையின் பின் அரசாங்கத் தரப்பினரால் 'சுமுகத் தீர்வு', 'அரசியற் தீர்வு' என்ற பதங்கள் சில இடங்களில் நலிந்த குரலில் பேசப்படுகின்றன. இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை. பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது. இதற்கு ஒரே தீர்வு இராணுவத் தீர்வுதான் எனப் பேசிவந்த ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது, "இவ்வருட இறுதிக்குள் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காணப்படும். இதற்கு அமைதியான ரீதியில் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பை நான் ஏற்றிருக்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளமையும் இதன் பாற்பட்டதே.

இதை ஒத்ததாகவே, அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்கா, "நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம். அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வர வேண்டும் எனத் தெரிவித்ததோடு, "விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்றும், அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை ஏனைய கட்சிகள் வரவேற்க வேண்டும்" எனவும் நிபந்தனை விதித்துள்ளார்

நிபந்தனைகளுடன் கூடிய இப் பேச்சுவார்த்தை பற்றிய அறிவிப்புக்கள் பற்றி மக்கள் எவரும் தப்புக்கணக்கு எதையும் போட்டு விடக்கூடாது ஏனெனில் இது ஐ. தே. கட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடி காரணமாக வெளிவந்துள்ள அறிவிப்பே ஒழிய உளப்பூர்வமாக அரசியற் தீர்வு குறித்து அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடல்ல. அதாவது ஒரு பருவ கால மாற்றமே ஒழிய

# இராணுவத்தினர் நடவடிக்கையால் 17000 சிறுவர் அனாதையாயினர்

## மட்டக்களப்பு சென்ற யுனிசெவ் பிரதிநிதி தகவல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்காப் படையினரின் நடவடிக்கைகளால், சுமார் 8000 பெண்கள் தமது கணவன்மார்களை இழந்துள்ளனர் எனவும், இவர்களில் பெரும்பாலோர் 18 - 25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், புள்ளி விபரங்களிலிருந்து தெரியவருகிறது.

அண்மையில் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த யுனிசெவ் நிறுவன வதிவிடப் பிரதிநிதி இது தொடர்பாக மேலும் கூறுகையில் சுமார் 17, 000 குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் அநாதைகளாகியிருப்பதாகவும், மேலும் சுமார் 8000 பேர் இராணுவ அல்லது படையினர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# தமிழர்களின் கோரிக்கைக்கு பாட்டாளிகள் ஒத்துழைப்பு

## -குணசேன மகாநாம

(கொழும்பு)

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு பாட்டாளி மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் குணசேன மகாநாம கொழும்பில் நடைபெற்ற தமது சங்கத்தின் மேதினக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் டி.எஸ் சேனநாயக்கா காலம் முதல் தமிழர்கள் ஏமாற்றப்பட்டே வந்துள்ளனர். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படாமையினால் தான் தமிழிளைஞர்கள் வேறு வழியின்றி ஆயுதமேந்திப் போராடுவதாகவும் தெரிவித்தார்.

# ஐ-தே-கவின் தலைமையின் இனவாத அரசியல்

## ஒஸி அபேகுணசேகரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கடைப்பிடித்த இனபேதமற்ற கொள்கை காரணமாக நாம் அவருடன் இணைந்தோம் ஆனால் தற்போதைய தலைமை இனபேத அரசியலை நடத்தி வருவதை அவதானித்து நாம் அதனுடன் சேர்ந்து கொள்ள விரும்பவில்லை இவ்வாறு சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் ஒஸி அபேகுணசேகரா தெரிவித்தார்.

கொழும்பு ஹவ்லொக் பூங்கா மைதானத்தில் நடைபெற்ற கட்சியின் மேதினக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில் வெற்றிவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் பண்டாரநாயக்கா குடும்பமும், இடது சாரி என்ற பெயரில் முதலாளித்துவத்தையே கடைப்பிடித்து வருகிறது. வெற்றி வாய்ப்பை தூரத்தே கண்டதும் திருமதி சிறிமாவோ உலக வங்கி அதிகாரிகளுடன் இரகசியப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து விட்டார் என்றும் தெரிவித்தார்.

# ஞாபகார்த்த விழா

செஞ்சிலுவைச் சங்கத்தினை உருவாக்கியவரான ஹென்றி டுனால்ட் அவர்களின் ஞாபகார்த்த விழா அகில உலக செஞ்சிலுவைச் சங்க நாளுக்கு பிரகடனப்படுத்தி உலகெங்கிலும் இது கொண்டாடப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் இவ்விழாவில் வலது குறைந்தோர்க்கான போட்டிகள் நடைபெறும்.

# உறுதிமிக்க இளைஞர்களே எமது போராயுதங்கள்

## வை. கோபாலசாமி தெரிவிப்பு

(சென்னை)

வைர நெஞ்சம் கொண்ட இளைஞர்கள் துணைக்கிருந்தால் வாளும் வேலும் எனக்கு தேவையில்லை. இவர்கள் தான் எமது கையில் உள்ள வலிமையான ஆயுதங்கள் என வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார். திருத்தணியில் தி. மு. க கோபாலசாமி அணி நடத்திய பொதுக்கூட்டத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலில் ஒரு மாற்றம் உருவாகிக்கொண்டு இருக்கின்றது. மக்கள் மாறுதலை விரும்புகின்றனர். ஊழலில் திளைத்துக் கொண்டிருக்கும் அரசுகளுக்கு சரியான பாடம் புகட்ட மக்கள் தயாராகி விட்டனர்.

டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களே நீங்கள் கஷ்டப்பட்டு திரட்டிக் கொண்டு வருகின்ற கூட்டத்தில் 10சத வீதம் தான் இளைஞர்கள். எங்கள் பொது நிகழ்ச்சிகள் இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு கடலென புறப்பட்டு வரும் கூட்டம் 90 சத வீதம் இளைஞர்கள்; இதை மறந்து விடக் கூடாது. கலைஞர் அவர்களே உங்களுடைய பேச்சில் 90 சத வீதம் என்னைப்பற்றி பேச வேண்டிய அவசியமென்ன? நான் தான் உங்களுக்கு ஒரு பொருட்டல்லவே? எமக்குத் தான் செல்வாக்கில்லை என்று சொல்கிறீர்களே? பின் ஏன் முக்கால் மணி நேரம் என்னைப்பற்றியே பேசுகிறீர்கள்? நான்தான் மிகவும் சாதாரணமானவனாயிற்றே; எனக்கா இவ்வளவு நேரத்தை வீணாக்குவது?

கலைஞருக்கு மாறுபட்டு

# இலட்சிய நெருப்பையே நாம் நெஞ்சில் சுமக்கிறோம்

# கோபாலசாமி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளட்டும்

## -அமைச்சர் செங்கோட்டையன்

(சென்னை)

கட்சிக்கு பெயரையும் இழந்து, சின்னத்தையும் இழந்து, கொடியையும் இழந்து நிற்கும் கோபாலசாமி முதலில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளட்டும் அதன் பிறகு அ. இ. அ. தி. முகவை அசைப்பதைப் பற்றி பேசிக் கொள்ளட்டும். இவ்வாறு தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் கே. ஏ. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வைபவமொன்றில் பேசிய அமைச்சர் செங்கோட்டையன் மேலும் கூறுகையில் உலகத்தின் புகழ் பெற்ற பத்திரிகைகள் மற்றும் செய்திப் படம் எடுப்பவர்கள் எல்லாம் இந்தியாவில் இருக்கும் ஒரு துணிச்சல் மிக்க பெண் முதல்வர் என்று முதல்வரைப் பாராட்டுகின்றன.

இப்படிப்பட்ட ஆற்றல் மிக்க முதலமைச்சரைத் தான் அட்ரஸ் இல்லாதவர்கள் நாங்கள் வீழ்த்திடுவோம் என்று மிரட்டுகின்றனர். ஆட்சியை இழந்து விட்ட பிறகு தமிழ் நாட்டில் 25 ஆண்டு காலமாக ஏதாவது ஒரு திராவிட இயக்கத்தின் தோளில் ஏறி திருவிழா பார்க்கிற காங்கிரஸ் கட்சி இன்றைக்கு மத்தியில் இருக்கும் அதிகாரத்தைக் காட்டி மிரட்டுகிறது.

எங்களோடு உறவு இருந்தால் விடுதலைப் புலிகளை ஒடுக்கிய வீராங்கனை என்று பாராட்டுவதும், உறவு முறிந்தவுடன் புலிகள் நடமாடுகிறார்கள் என்று கட்டுக் கதை கட்டுவதும் காங்கிரஸ்காரர்களுக்குவாடிக்கை என்றும் தெரிவித்தார்.

ப்பாடல்ல. அதாவது ஒரு பருவ கால மாற்றமே ஒழிய வேறொன்றும் இல்லை.

தென்மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி ஐ. தே. கட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடி என்பவற்றால் டி பி. விஜேதுங்கா தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டதாக காட்டிக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சியாகவே இதனைக் கொள்ள வேண்டும். அதாவது பிரேமதாசாவின் கொள்கைக்குப் புத்துயிர் ஊட்ட முற்படுவதாகக் காட்டுவதுபோல், இனப்பிரச்சினை விவகாரத்திலும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ள மாதிரி காட்டிக் கொள்ள டி. பி. விஜேதுங்கா முற்படுகின்றார். ஆனால், உண்மையில், டி பி. விஜேதுங்கா உளப்பூர்வமாக இவ் அறிவிப்புக்களை விடவில்லை

டி. பி. விஜேதுங்கா அரசியல் லாப நோக்கத்திற்காகவே இதனை மேற்கொள்கின்றார் என்பதற்கு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா சிலை திறப்பு விவகாரத்தில் அவர் நடந்து கொண்ட முறையே சிறப்பான உதாரணமாகும். சிலை திறப்பு விழாவிற்கு முதல்நாள் அவ்விழாவில் தான் கரிசனை உள்ளவர் போல் காட்டிக் கொள்வதற்காக சிலை அமைக்கப்பட்ட இடத்திற்குச் சென்ற டி. பி. விஜேதுங்கா, அதனைப் படம் பிடித்து ரூபவாகினியில் ஒளிபரப்பவும் செய்தார். ஆனால், மறுநாள் சுகவீனம் என்ற ரீதியில் காலை சிலை திறப்பு விழாவிற்குச் செல்லாமல் விட்ட அவர் பின்னர் மாலையில் பொது வைபவம் ஒன்றில் கலந்து கொண்டுதனது சுயரூபத்தை வெளிக் காட்டினார்

இனப்பிரச்சினை விவகாரத்திலும் அவரின் நிலைப்பாடும் அவ்வாறானதே. சுமுகத்தீர்வு, அரசியல் தீர்வு என்று அவர் பேசத் தொடங்கினாலும் வடபகுதியில் நடைபெறும் சம்பவங்கள் அதற்கு எதிர்மாறானவையாகும். இராணுவம் நவீன ஆயுதங்கள் சகிதம், பெரும் எண்ணிக்கையான துருப்புக்களுடன் பெரும் போருக்கு தயாராகி நிற்கின்றது. சிறிய தாக்குதல்கள் தொடங்கி விட்டாலும், பெரும் யுத்தம் எப்பொழுதும் ஆரம்பிக்கப்படலாம் என்ற சூழ்நிலையே வடக்கின் யதார்த்தமாக வுள்ளது-

இந்நிலையில் தேர்தல் தோல்வியினாலும், எதிர்பார்க்கப்படும் தேர்தல்களினாலும் தான் டி. பி. விஜேதுங்காவின் பேச்சுக்கள், அறிவிப்புக்களில் சமாதானம் என்ற சொல் இடம் பிடித்துள்ளது- ஆனால், அது அவரின் உளப்பூர்வமான விருப்பமாக இல்லை. அவ்வாறு இருக்குமானால், சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையும், நிபந்தனைகளும் போட்டுக் கொண்டு இருக்க வேண்டிய அவசியமில்லை

ஆனால், டி பி- விஜேதுங்காவின் இந்நடவடிக்கை நன்மை தரப் போவதில்லை- மக்கள் பற்றிய அவரது கணிப்பீடு தவறானது என்பதையே இது காட்டுகின்றது. அவர் எதிர்பார்ப்பது போல் அறிவிப்புக்கள், பேச்சுக்கள் என்பனவற்றைக் கண்டு மக்கள் ஏமாற மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் முட்டாள்கள் அல்ல. அத்தோடு கடந்த கால அனுபவங்களை நிறையவே கொண்டவர்கள்,

ஆரூடம்பார்ப்பதும், யாகம் வளர்ப்பதும் நாங்களல்ல என்று தி. மு. க தலைவர் கருணாநிதிக்கு அளித்த பதிலில் வை. கோபாலசாமி கூறியுள்ளார்.

சென்னையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் வை. கோபாலசாமி அதில் மேலும் குறிப்பிடுகையில், ஆருடம் பார்ப்பதும், சாதகம் கேட்பதும் ஏவலர்களை ஏவி வீட்டு ஆயுள் விருத்திக்கு யாகம் வளர்ப்பதும், அதற்காக சில விரதங்களைகடைப்பிடிப்பதும், பரிகாரம் நாடி கறுப்பு பவளம் சேர்ந்த மாலையைத் தேடி அணிந்து கொள்வதும் அந்தப் பெரிய மனிதர்களுக்கே,- ஊரையும், உலகத்தையும் மதுரமான தமிழாலே மயக்கி ஏமாற்றும் அந்தப்புண்ணியவான் களுக்கே ஆகிவந்த பழக்கம் என்பதை நாடு அறியும்.

நாம் லட்சிய நெருப்பை நெஞ்சில் சுமப்பதல், உயிருடன் இருப்பவர்கள். நெருப்பையும், கறையான் அரிக்குமோ? அப்படித் தூய்மையை நேசிப்பதனால் தான் துரோகத்தின் தூசு படிய முடியாத லட்சோபலட்சம் இளைஞர்களின் நம்பிக்கையைப் பெற்று நாட்டில் வலம் வருகின்றோம்.

அரசியல் நேர்மை, பொது வாழ்வில் தூய்மை, லட்சியத்தில் உறுதி என்ற உன்னத வார்த்தைகளை உதடுகளால் உச்சரிக்க முடியாதவர்கள் நம் மீது பொல்லாங்கு சொல்வதனாலேயே மேலும் அதிக அளவில் மக்கள் நம் மீது வாஞ்சையோடு வருகின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

...குவது?

கலைஞருக்கு மாறுபட்டு நடக்கவேண்டும் என்று எந்தக் காலத்திலும் நினைக்காதவன் நான். குற்றம் செய்யாத என்னை மூன்று வருடகாலமாக வஞ்சித்தீர்கள்; அவமானப்படுத்தினீர்கள், ஒதுக்கினீர்கள். அனைத்தையும் நான் சகித்தேன். கொலைகாரன் என பழிசுமத்தி தொண்டர்கள்மூலம் என்னை விரட்டியடிக்கமுனைந்தீர்கள். அஸ்திரம் உங்கள் பக்கமாக திரும்பி விட்டது.

ஒரு தொண்டனுக்காக லட்சக் கணக்கான தொண்டர்கள் ஒன்று சேர்ந்தனர். இந்த வரலாறு தி. மு. கவிற்கு பெருமை அளிக்கின்றது. எங்கள் பயணத்தை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என கோபாலசாமி மேலும் தெரிவித்தார்.

## தென் ஆபிரிக்காவின்

## புதிய அமைச்சரவை விபரம் புதனன்று வெளியிடப்படும்

தென் ஆபிரிக்காவின் அடுத்த அதிபராகப் பதவியேற்க இருக்கும் திரு நெல்சன் மண்டேலா எதிர்வரும் புதன்கிழமையன்று தமதுபுதிய அமைச்சரவையை அறிவிப்பார்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆபிரிக்க தேசிய காங்கிரசின் பிரதிநிதி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், அமைச்சரவையின் பெயர்களை அறிவிக்கும்அதிகாரம்நெல்சன்மண்டேலாவிற்கும், ஆறு பேரைக் கொண்ட உயர் குழுவொன்றுக்கும் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

## டுட்சி இனப் போராளிகள் மேலும்முன்னேறுகின்றனர்

### றுவாண்டா நிலை பற்றிதகவல்

(கிகாலி)

றுவாண்டாவில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள டுட்சி இனப் போராளிகள்றுவாண்டாஇராணுவத்தலைமையகத்தைநோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தலைநகர் கிகாலியில் தரையிறங்க முயன்ற ஐ. நா விமானம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதை தொடர்ந்து அவ் விமானம் பின்வாங்கிச் சென்றது.

## கால்வாய் சுரங்கப் பாதை இன்று திறந்து வைப்பு

(லண்டன்)

இங்கிலாந்திற்கும், ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும் இடையேயான தரை மார்க்கப் பாதையான கால்வாய் சுரங்கப் பாதை இன்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. பிரிட்டிஷ் பிரதமர் எலிசபெத்மகாராணியும், பிரான்சு அதிபர், பிரான்சுபா மித்தரோங்கும் இத் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளனர்.

மகாராணி எலிசபெத் அதிவேக ரயிலில் வாட்டர்லூ ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு பாரிசின் ஹவே ரயில் நிலையத்தை மூன்று மணி நேரத்தில் வந்தடைவார். பிரான்சு அதிபர் மற்றுமொரு அதிவேக ரயிலில் ஹவே வோய் சேர்வார் அங்கு இருவரும் சேர்ந்ததும், பிரிட்டிஷ் அரச ரயிலுக்கும், பிரான்சு ரயிலுக்கும் இடையே கட்டப்பட்டிருக்கும் நாடா வெட்டப்படும்- பின்னர் மதிய போசனம் இடம் பெறுவதை தொடர்ந்து இருவரும் ரயில் மூலம் லண்டனுக்கு சென்று இச்சுரங்கப் பாதையை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது-

பெண் முதல்வர் என்று முதல் ... வித்தார்.

## இஸ்ரேல்-பாலஸ்தீனம் ஒப்பந்தம் கைச்சாத்து

(கெய்ரோ)

பாலத்தீனியர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி வழங்கும் ஒப்பந்தத்தில் இஸ்ரேலிய பிரதமரும் பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தும் நேற்று கெய்ரோவில் வைத்து கைச்சாத்திட்டுள்ளனர்.

ஜோர்தான் மேற்குக் கரையிலும் காஸா பிரதேசத்திலும் பாலத்தீனியர் மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியைப் பெற இவ் ஒப்பந்தம் உதவும். 1967-ம்யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட அரபுப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய துருப்புகள் மீளப் பெறப்படுவதற்கும் இது வழிவகுக்கும் 2500 வெளிநாட்டுப் பிரமுகர்கள் மற்றும் எகிப்தியப்பிரமுகர்கள் முன்னிலையில் 200 பக்கங்களைக் கொண்ட இவ் உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-05-07 சனி இரவு

8. 01 ற்கு- அறிவியல் கலசம்
8. 10 ற்கு- தாயகப் பாடல்கள்
8 25 ற்கு- நேயர் கடிதங்கள்
8. 30 ற்கு- செய்திகள்
8. 40 ற்கு- சித்திரம் "வீரம் விளையும் நிலம்"

1994-05-08 ஞாயிறு காலை

7. 02 ற்கு- மாவீரர் வணக்கம்
7. 15 ற்கு- களத்தில் மலர்ந்தவை
7. 30 ற்கு- செய்திகள்
7. 35 ற்கு- பத்திரிகைச் செய்திகள்
7. 40 ற்கு- தொடர்ந்து களத்தில் மலர்ந்தவை

## விபத்தில் பலியானோர்க்கு முதல்வர் அனுதாபம்

(சென்னை)

சென்னையை அடுத்துள்ள பழவேற்காடு ஏரியில் படகு விபத்தில் பள்ளி மாணவிகள் உயிரிழந்த சம்பவம் குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்- இச் சம்பவத்தில் 29 பேர் உயிரிழந்ததும், ஆறு பேர் மீட்கப்பட்டதும் தெரிந்ததே. இச் சம்பவம் பற்றி கேள்வி பட்டவுடனேயேசம்பவம் நடந்த இடத்திற்கு இரு அமைச்சர்களை அனுப்பி நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், இத்துயர சம்பவம் குறித்து விபரிக்க வார்த்தைக[illegible]இல்லையென்றும் தமிழக முதல்வர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

### நெருக்கடி நிலை

யேமன் நாட்டில் முப்பது நாட்களுக்கு நெருக்கடி அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது, அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், வடக்கத்தைய மற்றும் தெற்கத்தைய படைகளுக்கும் இடையே சண்டை பரவிப் பெருகியிருப்பதைத் தொடர்ந்து அங்கு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## தாய்மண் மீட்க உறுதி எடு
## தமிழீழம் எங்கும் மரங்கள் நடு

# புதிய கட்சியின் பெயர் வை. கோபாலசாமி அறிவிப்பு

(சென்னை)

வை. கோபாலசாமி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் என்ற புதிய கட்சியை ஆரம்பித்துள்ளார். நேற்று சென்னையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டதாக கோபாலசாமி தெரிவித்தார்.

இலங்கையில் நிலைமை சாதகமாகும்வரை இலங்கைத் தமிழர்களை அங்கு திருப்பி அனுப்பக்கூடாது என தமிழக அரசைக் கோரும் தீர்மானம் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தீவிரவாதப் பிரிவு எதையும் ஆதரிப்பதில்லை என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

கோபாலசாமி புதிய கட்சியின் பொதுச் செயலாளராகவும் எல். கணேசன் கட்சித் தலைவராகவும், எம். கண்ணப்பன் பொருளாளராகவும் பொதுக்குழு கூட்டத்தில் தெரிவாகினர்.

புதிய கட்சியின் கொடியில் மூன்று பிரிவாக மேலும் கீழும் சிவப்பு நிறமும் நடுவே கறுப்பு நிறமும் அமைந்துள்ளது. தி.மு.க ஸ்தாபகர் அண்ணாத்துரையின் கொள்கைகளையே புதிய கட்சியின் பற்றும் என இதன் பொதுச் செயலர் கோபாலசாமி தெரிவித்தார்.

தி.மு கவின் பெயரையோ, கட்சிக் கொடியையோ கோபாலசாமி பிரிவு பயன்படுத்தக்கூடாது என நீதிமன்றம் தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. புதிய கட்சி இன்னமும் தேர்தல் ஆணையகத்தால் அங்கிகரிக்கப்படவில்லையாததால் எதிர்வரும் 26ஆம் திகதி இடைத்தேர்தலில் இக் கட்சியின் வேட்பாளர்கள் சுயேட்சை சின்னங்களிலேயே போட்டியிடுவர் எனக் கூறப்படுகிறது.

## ஆங்கிலப்பயிற்சிபெறசென்ற மாணவர் மீது 'ராக்கிங்'

(நல்லூர்)

யாழ். இந்துக் கல்லூரியில் நேற்றுப் பிற்பகல் கெல்ற் ஆங்கில வகுப்புக்குச் சமுகமளித்த பல்கலைக்கழக மாணவர் மீது வெளியிலிருந்து நுழைந்த மாணவர் கோஷ்டி ஒன்று 'ராக்கிங்' செய்தது.

1993/94 ஆம் கல்வி ஆண்டு கற்கை நெறிக்குப் பல்கலைக் கழகத்தில் கல்விபயில தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கெல்ற் ஆரம்ப வகுப்பு நடந்தபோதே ராக்கிங் நடைபெற்றது- அயலில் உள்ளவர்கள் தலையிட்டு ராக்கிங்கில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து வெளியேற்றினர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர் தெரிவிக்கின்றனர்-

## பிரதிகல்விப்பணிப்பாளரால் அதிபர் கூட்டம் பகிஷ்கரிப்பு

(நல்லூர்)

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கோட்டப் பாடசாலைகள் அதிபர்கள் கூட்டத்தில் நல்லூர் - யாழ்ப்பாணக் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலந்துகொள்ளவில்லை என்று யாழ் கல்வி வலயம் [ஒன்று] வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

அதிபர்களுக்கான இந்தக் கூட்டம் இந்த வாரத்தின் முற்பகுதியில் இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன இந்த இரு நாள் கூட்டங்களையும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பகிஷ்கரித்ததாகத் தெரியவருகிறது கூட்டம் யாழ் கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளரால் ஒழுங்கு செய்யப்பட்டு, அவர் தலைமையிலேயே நடைபெற்றது.

நிர்வாக பரவலாக்க நடைமுறை தொடர்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கும், பணிப்பாளருக்கும் இடையில் நிலவும் முறுகல் நிலையே இந்தப் பகிஷ்கரிப்புக்கு காரணம் என்று அதிபர்கள் தரப்பில் பேசிக்கொள்ளப்படுகிறது

## கால்நடை வளர்ப்போருக்கு பயிற்சி வகுப்புக்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும்கால்நடை சுகாதார திணைக்களமும் இணைந்து கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்புக்களை பரவலாக நடாத்தி வருகின்றன.

இம்மாதம் 7ம், 8ம் திகதிகளில் சுண்ணாகம் மயிலணி மகாவித்தியாலயத்தில்மாலை இரண்டு மணிக்கும், 11ம் திகதி முதல் மூன்று நாட்களுக்கும் தினமும் மாலை இரண்டு மணிக்கு வட்டுக்கோட்டை, திருஞானசம்பந்தர் வித்தியாசாலையிலும் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெற உள்ளன.

இதே போன்று மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில்18-05 94 முதல்மூன்று தினங்களும் ... விப்பாய் ... சுகாதார பராமரிப்பு நோய் தடுப்பு ஆகியவை பற்றிய விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. அனைத்து கால்நடை வளர்ப்போரையும் இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றி பயன்பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது.

## பொதுவாழ்வில் எந்திர பொறியியல்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் ''பொது வாழ்வில் எந்திரப் பொறியியல்'' அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 111 இன் ஆரம்ப விழா சனிக்கிழமை பிற்பகல் ...

## உதைபந்தாட்ட போட்டி

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் இணுவில் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது

இன்று மாலை 3 30 மணிக்கு இரண்டாம் பிரிவில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் தெல்லிப்பழை கிறஸ் கொப்பர்ஸ் வி. கழகம், முதலாம் பிரிவில் பொற்பதி வி. கழகம் எதிர் கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் என்பன மோதும்

## பயிற்சிபெறுநருக்கு 100ரூபா வழங்குபவருக்கு 90 ரூபா

(நல்லூர்)

சேவைக்கால வகுப்புகளில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு நூறு ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அதேவேளை சேவைக்கால வகுப்புகளைநடத்தும் ஆசிரிய ஆலோசகர்களுக்குத் தொண்ணூறுரூபா வழங்கப்படுகிறது. தங்களுக்குக் குறைவான கொடுப்பனவு வழங்கப்படுவது குறித்து ஆசிரிய ஆலோசகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்-

கல்வி வலயம் ஒன்றில் இச் சேவைக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ- சிவானந்தனிடம் கொடுப்பனவு சம்பந்தமாகக் கேட்டபோது, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைவாகவே கொடுப்பனவு வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்-

சேவைக்காலப் பயிற்சி அமர்வுக்கான கொடுப்பனவு சம்பந்தமாக கல்வி உயர் கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றுநிருபத்தின் படி முப்பது மைல்களுக்குக் குறைவான தூரமுள்ள இடங்களிலிருந்து சேவைக்கால வகுப்புகளில் கலந்து கொள்ள வரும் ஆசிரியர்களுக்கும், ஆலோசகர்களுக்கும் ஒரு நாளைக்கு 100 ரூபா கொடுப்பனவும், முப்பது மைல்களுக்குக் கூடுதலான தூரத்திலிருந்து கலந்து கொள்பவருக்கு 125 ரூபாவும் கொடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது-

## ஆண்டு நிறைவும் விளையாட்டுப் போட்டியும்

இன்று பிற்பகல் 2.30 மணியளவில் குருநகர் தொடர்மாடி வாசன் கல்வி வளர்ச்சிக் கழக மைதானத்தில் கல்வி வளர்ச்சிக் கழக இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## காய்ச்சலுக்கு குழந்தை பலி

(வடமராட்சி)

காய்ச்சல் நோய்க்கு இலக்கான ஆறுமாதக் குழந்தை ஒன்று நேற்று இறந்துள்ளது. நோய்க்கு இலக்கான இக் குழந்தையை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் அக் குழந்தை நடுவழியே இறந்துள்ளது (யோ)

## கோட்ட ரீதியாக அதிபர் விபரம் கோரல்

பிரதிக் கல்விக் கோட்டங்கள் ரீதியாக பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர்கள் பற்றிய விபரங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன-

மேற்குறித்த சுற்று நிருபங்களை சகல பிரதிக் கல்விக் கோட்டங்களுக்கும்கல்விஅமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

இச் சுற்று நிருபத்தில் அதிபர்களின் தரங்கள் பற்றியும், அதிபர்களது நியமனம் பற்றியும்,சேவைக் காலங்கள் பற்றியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது-

## சிறிலங்கா அரசாங்கத்தை ராவ் பாராட்டினாராம்

இனப்பிரச்சினை தீர்வுக்காக சிறிலங்கா அரசு எடுக்கும் முயற்சிகள் குறித்து வெளியுறவு அமைச்சர் ஹமீட் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு எடுத்து விளக்கிய போது நரசிம்மராவ் அதற்கு பாராட்டு தெரிவித்தார் என சிறிலங்கா பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது-

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஹமீட் பாராளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார் வடக்கு - கிழக்குப் பகுதிக்கு இந்தியாவிலுள்ளதைப் போன்ற சுயாட்சி குறித்து சிபார்சு செய்யப்பட்டுள்ளதையும், அரசியல் தீர்வுகாண சிறிலங்கா அரசு எடுக்கும் முயற்சி குறித்தும் அமைச்சர் ஹமீத் இந்தியப் பிரதமருக்கு எடுத்து விளக்கியதாகவும் அரசு எடுத்து வரும் இந்த நடவடிக்கையை பிரதமர் நரசிம்மராவ் பாராட்டினார் எனவும் கூறப்பட்டது.

## ஊவாமாகாணத்தில் புதிய பல்கலைக் கழகம்

(கொழும்பு)

ஊவாமாகாணத்தில் புதிய பல்கலைக் கழகம் ஒன்று உருவாக்குவதற்கான அவசியம் குறித்து தென்பகுதியின் கல்விமான்கள் பலர் வலியுறுத்தி வருகின்றனர்.

இப்பல்கலைக் கழகம் உருவாக்கப்பட வேண்டியதன் தேவை குறித்த கருத்தியல் ரீதியான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுவிட்டது. இத் திட்டத்தை அநேக கல்விமான்கள் வரவேற்றுள்ளனர்,

இதனால்மேற்படி பகுதியில் காலக்கிரமத்தில் ஒரு புதிய பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்று கொழும்பில் இருந்து எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன, (க)

## உயர்தர

பாய் இந்துக்கல்லூரியில்உள்ள கோட்டக் கல்வி அலுவலகத்திற்குத் தவறாது சமுகம் தருமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

## உலங்குவானூர்தி தாக்குதல்

(வடமராட்சி)

தொண்டமனாறு குடியிருப்புகள் மீது சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று நேற்றுக் காலை வட்ட மிட்டவாறு துப்பாக்கிப்பிரயோகம் செய்தது.

பலாலியிலிருந்து காலை 5.15 மணியளவில் இப்பகுதி ...

## கூ.ரேயை

ண்டு மணிக்கு வட்டுக்கோட்டை, திருஞானசம்பந்தர் வித்தியாசாலையிலும் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெற உள்ளன.

இதே போன்று மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 18-05 94 முதல் மூன்று தினங்களும், மனிப்பாய் மகளிர் கல்லூரியில் 23,26, 27-ம் திகதிகளிலும் பயிற்சி வகுப்புகள் இடம் பெறும். தொடர்ந்து ஆனி மாதம் 6-ம், 7-ம் 8-ம் திகதிகளில் சித்தன்கேணி கணேசா வித்தியாசாலையிலும் பயிற்சி வகுப்பு நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்பில் மிருக

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் "பொது வாழ்வில் எந்திரப் பொறியியல்" அடிப்படைக் கற்கை நெறி தொகுதி 111 இன் ஆரம்ப விழா சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் வைபவத்தில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆரம்பவுரையையும், பொறியியலாளர் திரு. சக்திதாசன் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர்.

டுக் கழகம் எதிர் தெல்லிப்பழை கிறஸ் கொப்பர்ஸ் வி. கழகம், முதலாம் பிரிவில் பொற்பதி வி. கழகம் எதிர் கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் என்பன மோதும்

சுற்றுநிருபத்தின் படி முப்பது மைல்களுக்குக் குறைவான தூரமுள்ள இடங்களிலிருந்து சேவைக்கால வகுப்புகளில் கலந்து கொள்ள வரும் ஆசிரியர்களுக்கும், ஆலோசகர்களுக்கும் ஒரு நாளைக்கு

ஒன்று நேற்று இறந்துள்ளது. நோய்க்கு இலக்கான இக் குழந்தையை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் அக் குழந்தை நடுவழியே இறந்துள்ளது (யோ)

திற்குத் தவறாது சமுகம் தருமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

(வடமராட்சி)

தொண்டமனாறு குடியிருப்புகள் மீது சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று நேற்றுக் காலை வட்ட மிட்டவாறு துப்பாக்கிப்பிரயோகம் செய்தது.

பலாலியிலிருந்து காலை 5.15 மணியளவில் இப் பகுதிக்கு வந்த இவ் உலங்கு வானூர்தி பதினைந்துநிமிடம் வரை தொடர்ச்சியாக சுட்டது- (யோ)

## கூரேயை

தாஸவைப் பார்த்து, "உமக்கு மூளை சரியில்லையா?" என்று கேட்டதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தென்னாபிரிக்க அரசாங்க உபஜனாதிபதிகள் பெயர் அறிவிப்பு

(ஜோகனர்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்கத்தேர்தலில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் அமோக வெற்றிபெற்றாலும் அது எதிர்பார்த்த மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ள நெல்சன் மண்டேலா முதலாவது துணை ஜனாதிபதியாக ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர்ராபோகாம் பேகி நியமிக்கப்படுவார் எனவும் இரண்டாவது துணை ஜனாதிபதியாக, பதவிவிலகும் வெள்ளையரான டி கிளேக் நியமிக்கப்படுவார் எனவும் அறிவித்துள்ளார்

ஆபிரிக்க தேசியக் காங்கிரசின் இராணுவப் பிரிவின் தலைவர் ஜோமோடிசே பாதுகாப்பு அமைச்சராக பதவி ஏற்கவுள்ளார் வெளியுறவு அமைச்சராக அல்பிரட் வின்சோ நியமிக்கப்பட்டுள்ளார் கம்யூனிஸ் கட்சித் தலைவர் ஜோசேவோ வீடமைப்புத்துறை அமைச்சராகவும் மக்கள் அடிப்படை உரிமைக்காக பாடுபட்ட வழக்கறிஞர் ஒமார் நீதி அமைச்சராக பதவி ஏற்கவுள்ளார் இன்னும் பல அமைச்சுப் பதவிகள் அறிவிக்கப்படவுள்ளன

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் 27 அமைச்சர்களை நியமிக்கலாம் 10 அமைச்சுக்கள் இன்னமும் வெற்றிடமாக உள்ளன இவற்றில் முன்னாள் வெள்ளையின அமைச்சர்கள் நியமனமாவார் என எதிர்பார்க்கப்படுகிறது இவற்றில் நிதி அமைச்சு பதவி குறிப்பிடத்தக்கது

## நீண்ட

கள் மூலமாக தாமதங்களையும், இடைவெளிகளையும் நீக்குவதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தெரியவருகிறது- (க)

## மலத்தியோன்

யோனை பாதுகாப்பாக வைத்திருக்கவும் யாழ். மாவட்டத்திற்கு கப்பல்கள் மூலம் தேவையான காலங்களில் சீராக அனுப்பிவைக்க வசதியாகவும் இந்தக் கொள்கலன் பெறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கொள்கலன்களிலும் சுமார் 250 பெட்டி மலத்தியோன் அடைத்து வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் மலேரியா தடுப்பு பிரிவிற்குரிய மலத்தியோன் சீராக வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (தி), (ச)

## மலேரியா

உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளனர்-

தற்போது இத் தடுப்பு பிரிவில் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதாக சொல்லப்பட்டது இதன் காரணமாக மலேரியா நோயை இல்லாதொழிப்பதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது- (தி, ச)

## பிரேமாவின்

பிரேமதாசாவும் இணைவார்களா என்பது கேள்விக்குறியே என தெரிவிக்கப்படுகிறது,

இதே வேளை இவர்களை அரசியலில் ஈடுபடுத்த முற்படுவது என்பது அரசியல் இலாபத்திற்காகவே எனவும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது

## உத்தியோக

த்து அனேமான இராணுவ உயர் அதிகாரிகள் மட்டத்தில் நிலவிவருவதாகவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஆளும் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் உருவச்சிலை திறப்பு வைபவத்துக்கு வேண்டிய பாதுகாப்பு வழங்குவது குறித்த கூட்டத்தில் இராணுவத்த தலைமைப்பீடம் மேற்படி விடயங்களை மறைமுகமான முறையில் விளக்கிக் கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உண்ணாவிரதம்

அநீதிக்கு உடன் பரிகாரம் காணவேண்டும் எனக்கோரி இந்த நபர் கடந்த முதலாம் திகதி காலை 7-00மணியளவில் ஜனாதிபதி மாளிகை முன் உண்ணாவிரதம் இருக்க முயன்றதாவும், அப்போது அவர் கைது செய்யப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது-

மேற்படி நபர் உண்ணாவிரதம் இருந்த காட்சியைப் படம் பிடித்த பத்திரிகை படப்பிடிப்பாளரும் கைதானார்

## ஐ. தே. கவை

பிரிந்து சென்றவர்களை மீண்டும் கட்சியுடன் இணைத்து கட்சியை ஒரு நீண்டகால அடிப்படையில் வளர்த்துச் செல்வேன் என்றும் ஜனாதிபதியின் பணிப்புக்கு இணங்க அவருடன் கலந்து ஆலோசனை செய்து திருமதி ஹேமா பிரேமதாசா, சஜீத் பிரேமதாசா ஆகியோரை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பேன் எனவும் தெரிவித்தார்-


**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**உயர்தர வர்த்தக மாணவர் மன்றத்தின்**

**அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பின் முடிவுகள்**

1ஆம் பரிசு 1636
2ஆம் பரிசு 1375
3ஆம் பரிசு 0448

ஆறுதல் பரிசுகள்

1) 2724 2) 3980 3) 0036 4) 1886
5) 2088 6) 2762 7) 4367 8) 1320
9) 0137 10) 4901

குறிப்பு: அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசில்களை 20-05-1994 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கல்லூரி நடைபெறும் நேரத்தில் உயர்தர வர்த்தக மாணவர் மன்றப் பொருளாளரிடம் அதிர்ஷ்டச் சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

[8221] மன்றச் செயலாளர்



**யாழ் ஸ்ரீதரில்...**

தினசரி மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10, 30
மாலை 4, 6 மணி

**காற்றுவெளி**

(சி-9290)


# மரண அறிவித்தல்கள்

## அருளானந்தம் சதானந்தன்

சூறாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மட்டுவில் தெற்கில் வசித்தவரும் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் இளைப்பாறிய தொழில்நுட்பவியலாளரும் செல்வராணியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், சுபாஜினி (வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி) கௌரி (கலா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் மாணவி) ஆகியோரின் தந்தையார் காலமாகிவிட்டார். 7.5 94 சனிக்கிழமை இன்று பிற்பகல் 3மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஈமைக் கிரியை நடைபெற்று குச்சப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்லை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்
மனைவி

[8222]

## சின்னட்டி தருமலிங்கம்

அந்திரான் சங்குவேலியைச் சேர்ந்த சின்னட்டி தருமலிங்கம், காலமாகிவிட்டார். அன்னார் திரேசம்மாவின் அன்புக் கணவரும், அந்தோனிப் பிரான்சில், யெசிந்தா, மேரி றொசலீன், அன்ரனில், எவாஞ்சலின் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தலிங்கம் யேர்மிளா, சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மெஸ்மின், யேம்ஸ், ஆன்பாதறா, அனிஸ்ரன், றெக்னோ ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 7 5-94 சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு திருப்பலியின் பின் மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
திருமதி திரேசம்மா தருமலிங்கம்
(மனைவி)

அந்திரான்,
சங்குவேலி.

(8217)


**வெகுவிரைவில்... மண்ணுக்காக**

(இ)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.